Literacy for a Billion

Movie: Kanchana
Year: 2011

Song: Karuppu Perazhaga
Lyricist: Viveka

ஆ கருப்பு பேரழகா
கண்ணுக்குள்ள
நிக்குறியே ஜோரா
கிழிஞ்சுபுட்டேன் நாரா
கருப்பு பேரழகா
கண்ணுக்குள்ள
நிக்குறியே ஜோரா
கிழிஞ்சுபுட்டேன் நாரா
கருப்பு போல ஒரு பேரழகு
பூமி எங்கும் இல்ல
நீ கண்ணனோட புள்ள

அடி ஆத்தா ஆத்தா
குங்குமப்பூ பூண்டினையும்
தின்னுப்புட்டு
உங்கம்மா பெத்தாளா
அடி பார்த்தா பார்த்தா
பளபளன்னு இருக்குற
வெறும் பாலா ஊத்தி
குளிக்க வச்சாளா
அட கருப்பு கண்ணா வாடா
நான் காத்திருக்கேன் சூடா
ஒரசிப்புட்டு போடா
இது கருப்பு வெள்ளை படம்
ஏ செக்க செக்க செவப்பி
நீ சேலை கட்டின குல்பி
ஓடம்பு நரம்பு எழுப்பி
நீ ஓட்டுறே புதுபடம்
கருப்பு பேரழகா
கண்ணுக்குள்ள
நிக்குறியே ஜோரா
கிழிஞ்சுபுட்டேன் நாரா

நெருப்பு குளிச்சா
உந்தன் நிறம் வருமே
கருப்பு நிறந்தான்
என்னை கவர்ந்திடுமே
அடி நீ குளிச்ச
ஒரு துளி ஜலமே
கடல் விழுந்தா
கடல் வெளுத்திடுமே
கருமேகம் மட்டும்தானே
பூமியில மழை தூவும்
அழகு மழை தூவும்
கருப்பான
ராத்திரியை தேடி நிலா
வரும் போகும்
தெனமும் வரும் போகும்
அடி ஆத்தா ஆத்தா
வெண்ணைக்கட்டி தேகத்தால்
என்னை கட்டி
இழுத்துப்புட்டேடி
அடி ஆத்தா ஆத்தா
வெள்ளை கலரை காட்டித்தான்
கருப்பு பையனை
கவுத்துபுட்டேடி
அட கருப்பு கண்ணா வாடா
நான் காத்திருக்கேன் சூடா
ஒரசிப்புட்டு போடா
இது கருப்பு வெள்ளை படம்
ஏ செக்க செக்க செவப்பி
நீ சேலை கட்டின குல்பி
ஓடம்பு நரம்பு எழுப்பி
நீ ஓட்டுறே புதுபடம்

சூப்பர் ஸ்டார்
உன் தலைவன் கருப்பு
அவரோட ரசிகன்
நீயும் கருப்பு
ஏ சூப்பர் ஸ்டார்

மனசு ரொம்ப வெளுப்பு
அவரோட ரசிகருக்கும்
அதே சிறப்பு
உன் உடம்பெல்லாம்
மச்சம் வச்சி
படைச்சுப்புட்டான்
மாயக்கண்ணன்
நீ என்ன பண்ண
தலைமேல உள்ள
லோடை பக்கம் இறக்கி வச்சா
மச்சம் வரும்
மனசுக்குள் சாமி வரும்
அட கருப்பா கருப்பா
கண்ணை காட்டி
மயக்கிட்ட

கண்ணு மண்ணு
ஒண்ணும் புரியல
அடி கருப்பும் வெளுப்பும்
ஒட்டிக்கிட்டு நின்னுட்டா
ப்ளாக் அண்ட் வைட் அழகு
பாரு புள்ள
அட கருப்பு கண்ணா வாடா
நான் காத்திருக்கேன் சூடா
ஒரசிப்புட்டு போடா
இது கருப்பு வெள்ளை படம்
ஏ செக்க செக்க செவப்பி
நீ சேலை கட்டின குல்பி
ஓடம்பு நரம்பு எழுப்பி
நீ ஓட்டுறே புதுபடம்

*Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.*

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*